**இலங்கை கால்பந்து சம்மேளனம் - 2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் (“சம்மேளனம்”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிதிகள் மீதான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தியமைக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் பிரிவு 21(அ) இன் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சம்மேளனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ்) நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான எஸ்.எல்.எவ்.ஆர்.எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சம்மேளனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சம்மேளனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சம்மேளனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சம்மேளனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சம்மேளனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சம்மேளனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- சம்மேளனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- சம்மேளனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.5.1 பெறவேண்டியவை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 61,056,199 மற்றும் ரூபா 12,071,638 தொகையான பெற வேண்டிய மீதிகள் முறையே 2 தொடக்கம் 5 வருடங்களாகவும் மற்றும் 05 வருடங்களிற்கு மேலாகவும் அறவீடு செய்யப்படாமல் காணப்படுகின்றது. மேலும், இந்த மீதிகளை அறவிடுவதற்கு பயனுறுதியுள்ள நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் நிர்வாகக் குழுவின் அனுமதியினைப் பெற்று, வசூலிக்கப்படாத மீதிகளைக் கண்டறியவும் பெறுமதி குறைப்பு செய்யவும் நான் உடன்படுகின்றேன். நிச்சயமாக பெற்றுக்கொள்ளக்கூடிய நிதியினைச் சேகரிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மேலும் தாமதமின்றி நிலுவைகளை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### 1.5.2 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையே ஒன்பது வருடங்களிற்கு மேலாகவும் மற்றும் 2 தொடக்கம் 4 வருடங்களாகவும் தீர்க்கப்படாத ரூபா 591,484 மற்றும் ரூபா 3,717,115 தொகையான முற்பணங்கள் 04 யூன் 2026 ஆம் திகதிவரை கூட தீர்ப்பனவு செய்யப்படாமல் காணப்பட்டிருந்தது. | இதிலிருந்து, ரூபா 591,484 மற்றும் ரூபா 1,000,000 தொகைகள் தீர்ப்பனவு செய்ய முடியாது காணப்படுவதுடன் நிறைவேற்றுக் குழுவின் அனுமதிக்கு உட்பட்டு இவற்றை கணக்குகளிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய மீதிகளை எதிர்காலத்தில் அறவிடுவதற்கான ஒழுங்குகள் எடுக்கப்பட்டுள்ளது. | முற்பணங்களினை தீர்ப்பனவு செய்ய உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் பிரிவு 2 மற்றும் அதன் மீது செய்யப்பட்ட திருத்தங்கள். | சம்மேளனமானது வருமான வரி செலுத்தும் நோக்கத்திற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இவ்விடயத்தினைக் கவனத்திலெடுத்து எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கை | சம்மேளனமானது சட்ட ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுப்பதற்கு உடன்படுகின்றேன். | |
| (ஆ) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 39 | 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான விரிவான முகாமைத்துவ அறிக்கையிலுள்ள விடயங்களுக்காக சம்மேளனத்தினால் மேற்கொள்ளப்பட்ட சீர்செயல் நடவடிக்கைகள் தொடர்பாக 2026 யூன் 04 ஆம் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | சம்மேளனமானது சட்ட ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். |
| (இ) 2024 மே 03 ஆம் திகதிய 2382/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்கங்களின் ஒழுங்குவிதிகள் பகுதி III இன் பிரிவு 6(xii) | சம்மேளனத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டம், தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | விளையாட்டு ஒழுங்குவிதிகள் பின்பற்றப்பட வேண்டியதுடன் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) விளையாட்டு பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2021 திசெம்பர் 15 ஆம் திகதிய தேசிய விளையாட்டுச் சங்கங்கள் / சம்மேளனங்கள் இன் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட வழிகாட்டிகள். | | | |
| (i) பிரிவு 3 (iii) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து தேவையான அனுமதியினை பெற்றுக் கொள்ளாமல் சம்மேளனமானது ஒன்பது (09) வங்கிக் கணக்குகளை பேணி வந்துள்ளது. | இவ் விடயமானது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு முன்னைய ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்டுள்ளது | வங்கிக் கணக்குகளை திறப்பதற்கு முன் தேவையான் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| (ii) பிரிவு 3(xiv) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 373,532,353 பெறுமதியான நிலையான சொத்துக்களிற்கான பௌதீக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2026 ஆம் ஆண்டில் சொத்து மெய்மையாய்வு மேற்கொள்ளப்படும். | சொத்து மெய்மையாய்வு வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 51,022,471 பற்றாக்குறையாகவும் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 180,920,700 ஆகவும் இருந்தது. இதனால், நிதி பெறுபேறுகளில் ரூபா 129,898,229 பெறுமதியான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டிருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது சர்வதேச கால்பந்து சம்மேளனம் (FIFA) மற்றும் ஆசிய கால்பந்து கூட்டமைப்பு (AFC) ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட பங்களிப்புக்கள் அதிகரித்தமையே இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள் அதிகரிக்கின்ற அல்லது குறைகின்ற சதவீதத்துடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமானம்/செலவின விடயம் | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி | வேறுபாடுகள் சாதகம்/ (பாதகம்) | வீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| **வருமானம்** | | | | |
| FIFA பங்களிப்பு | 353,937,002 | - | 353,937,002 | - |
| AFC பங்களிப்பு | 37,556,474 | - | 37,556,474 | - |
| நிதி மற்றும் ஏனைய வருமானம் | 30,129,301 | 10,956,120 | 19,173,181 | 175 |
| **செலவினம்** | | | | |
| கால்பந்து தொடர்பான நிகழ்வுகள், அபிவிருத்தி மற்றும் போட்டிச் செலவினங்கள் | 356,482,259 | 72,743,225 | (283,739,034) | 390 |
| செயற்பாட்டுச் செலவினங்கள் | 110,756,371 | 95,286,425 | (15,469,946) | 16 |
| வெளிநாட்டு நாணய மாற்று நட்டம் | 5,406,616 | 23,847,169 | 18,440,553 | 77 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2023 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் FIFA இனால் சம்மேளனத்தின் மீது விதிக்கப்பட்ட இடைநீக்கம் 2023 செப்தெம்பர் 29 ஆம் திகதியிலிருந்து நீக்கப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டில் FIFA பங்களிப்பு மற்றும் AFC பங்களிப்பு என்பன குறிப்பிடத்தக்க அளவில் ரூபா 391,493,476 இனால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 சனவரி 01 தொடக்கம் 2017 ஜூலை 31 வரையான காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பில் முன்னைய நிதி முகாமையாளரிடமிருந்து கூட்டு மொத்தம் ரூபா 48,388,399 இனை அறவீடு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழக்கு இல. HC-CRM 4563/2023 இன் கீழ் இந் நிதி மோசடிக்கான ஓர் வழக்கு நீதிமன்றத்தில் ஏற்கனவே பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. | நீதிமன்றத் தீர்மானத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சம்மேளனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 ஆம் ஆண்டின் சர்வதேச விளையாட்டு நாட்காட்டியின் பிரகாரம், 09 உள்ளூர் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டில் உள்ளூர் விளையாட்டுப் போட்டிகள் எவையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் புதிய நிர்வாகக் குழு நியமிக்கப்பட்ட பின்னர், சர்வதேச போட்டிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் உள்ளூர் போட்டிகள் 2025 ஆம் ஆண்டில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | சம்மேளனத்தினால் நிகழ்வுகள் திட்டமிடப்பட்டவாறு நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சம்மேளனத்திற்குச் சொந்தமான கட்டடத்தின் மேல் தளத்தில் ஏறக்குறைய 2000 சதுர அடி பரப்பளவுடைய பகுதியினை தனியார் கம்பனியொன்றிற்கு மாத வாடகை ரூபா 150,000 அல்லது மாதமொன்றிற்கு ஒரு சதுர அடிக்கு ரூபா 75 என்ற அடிப்படையில் 2026 ஜனவரி 01 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதாக 2014 ஜனவரி 09 ஆம் திகதியன்று ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் சதுர அடிக்கான விகிதத்தில் வாடகைத் தொகையினை மதிப்பிடும் போது ஒரு நியாயமான அடிப்படையில் 2026 யூன் 04 வரையிலான காலத்திற்கான வாடகை தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக சம்மேளனத்தின் கணிசமான வருமானம் இழக்கப்பட்டுள்ளது. | விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஒரு புதிய உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கு உடன்படுகின்றேன். | சம்மேளனம் நியாயமான அடிப்படையில் வாடகையினை தீர்மானிக்க வேண்டும். |